100/DD/20

T.C-155

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST IN COMMERCIAL TAXES ACTS – PART III

(Without Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE
## கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Legal proceeding means

(A) Any proceeding or enquiry in which Court issue any judgment

(B) Any proceeding or enquiry to which the bank is not a party

(C) Any proceeding which is issued by a Court

(D) Any proceeding or enquiry in which evidence may be given and include an arbitration

சட்டபூர்வமான நடவடிக்கை என்பதன் பொருள்

(A) நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்படும் ஏதேனும் ஒரு நடவடிக்கை அல்லது விசாரணை

(B) வங்கி பங்கு பெறாத ஒரு நடவடிக்கை அல்லது விசாரணை

(C) நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஏதேனும் ஒரு நடவடிக்கை

(D) சாட்சியத்தினை வழங்கக்கூடிய மற்றும் மத்தியஸ்தத்தை உள்ளடக்கிய ஒரு நடவடிக்கை அல்லது விசாரணை

2. According to the Tamilnadu Revenue Recovery Act 1864, while processing for seizure and sale of movable property for arrears of revenue, which of the following is to be done first?

(A) Demand in writing to be served to the defaulter

(B) Receipt of a declaration from the defaulter

(C) Levy of distress

(D) None of the above

தமிழ்நாடு வருவாய் மீட்புச்சட்டம் 1864ன் படி வருவாய் நிலுவைக்காக அசையும் சொத்தினை கையகப்படுத்தி விற்பனை செய்யும் பொழுது முதலில் செய்யப்பட வேண்டியது எது?

(A) நிலுவைதாரருக்கு எழுத்துப்பூர்வமான கேட்பு சார்பு செய்தல்

(B) நிலுவைதாரரிடமிருந்து சாற்றுரை பெறுதல்

(C) ஜப்தி செய்தல்

(D) இவற்றுள் எதுவுமிலலை

3. Holder in due course is defined under which section of the Negotiable Instrument act 1881?

(A) Section 8
(B) Section 9
(C) Section 10
(D) Section 11

செலவாணி முறிச்சட்டம் 1881-ன் எப்பிரிவின் கீழ் Holder in due course என்பது விளக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 8
(B) பிரிவு 9
(C) பிரிவு 10
(D) பிரிவு 11

4. Within how many month or months from the date of registration, the first auditor or auditors of a company shall be appointed by its Board of Directors?

(A) 2 (Two) months
(B) 1 (One) month
(C) 4 (Four) months
(D) 3 (Three) months

நிறுவனம் பதிவு செய்யப்பட்ட எத்தனை மாதம் அல்லது மாதங்களுக்குள், முதல் தணிக்கையாளர் அல்லது தணிக்கையாளர்கள் இயக்குநர்களால் நியமிக்கப்பட வேண்டும்?

(A) 2 (இரண்டு) மாதம்
(B) 1 (ஒன்று) மாதம்
(C) 4 (நான்கு) மாதம்
(D) 3 (மூன்று) மாதம்

5. If further proceedings have to be taken before the suit can be completely disposed of, a decree is

(A) Partly preliminary partly final
(B) Final
(C) Preliminary
(D) Intermediate

உரிமையியல் வழக்கு முழுமையாக முடிவு பெற இயலும் முன்னரே கூடுதல் நடிவடிக்கைகள் எடுக்கப் பெற வேண்டிய நிலையில், ஒரு தீர்ப்பாணை என்பது

(A) பகுதி பூர்வாங்கமானது பகுதி இறுதியானது
(B) இறுதியானது
(C) பூர்வாங்கமானது
(D) இடைநிலையானது

6. A contract whereby the seller transfers or agrees to retransfer the property in goods to the buyer for a price is defined in the Sale of Goods Act 1930 as

(A) Sale of goods

(B) Delivery of goods

(C) Sale and agreement to sell of goods

(D) Agreement for the sale of goods

பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930-ன்படி விற்பனையாளர் பொருட்கள் உள்ள சொத்தினை வாங்குபவருக்கு பரிமாற்றம் செய்யவோ அல்லது மறுமாற்றுச் செய்ய ஒத்துக்கொள்ளவோ கூடிய ஒப்பந்தம் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பொருட்களின் விற்பனை

(B) பொருட்களை ஒப்படைத்தல்

(C) பொருட்களின் விற்பனை மற்றும் ஒப்பந்தம்

(D) பொருட்கள் விற்பனைக்கான இணக்கம்

7. "Bill of Exchange" is defined under which section of the Negotiable Instruments Act 1881?

(A) Section 4 (B) Section 7

(C) Section 5 (D) Section 6

"மாற்று முறி" என்பது செலாவணி முறிச்சட்டம் 1881-ன் எப்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 4 (B) பிரிவு 7

(C) பிரிவு 5 (D) பிரிவு 6

8. Section 79 of the Code of Civil Procedure 1908 is about

(A) Exemption of decree

(B) Suits by or against the Government

(C) Exemption from arrest and personal appearance

(D) Penalty for default

உரிமையியல் நடைமுறைகள் விதித் தொகுப்பு 1908 ன் பிரிவு 79 எதைப் பற்றி கூறுகிறது?

(A) தீர்ப்பாணையின் விலக்கு

(B) அரசால் அல்லது அரசுக்கு எதிரான உரிமையியல் வழக்கு

(C) கைது மற்றும் நேரடியாக ஆஜராவதிலிருந்து விலக்கு

(D) தவறுகளுக்கான தண்டம்

9. The formal express of the adjudication is known as

(A) Decree (B) Judgment

(C) Legal proceedings (D) Order

வழக்கின் தீர்ப்பினை முறையாக வெளிப்படுத்துவது

(A) தீர்ப்பாணை (B) தீர்ப்பு

(C) சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் (D) ஆணை

10. Section 162 of the Indian Evidence Act 1872 is about

(A) Opinion of experts (B) Production of documents

(C) Private documents (D) Public documents

இந்திய சாட்சியச் சட்டம் 1872-ன் பிரிவு 162 எதைப் பற்றியது

(A) நிபுணர்களின் கருத்து (B) ஆவணங்கள் தாக்கல் செய்தல்

(C) தனிப்பட்ட ஆவணங்கள் (D) பொது ஆவணங்கள்

11. Subject to the contract between the partners, the property of the firm shall be held and used by the partner exclusively for the purpose of the

(A) Firm (B) Profit

(C) Business (D) Partnership

பங்குதாரர்களுக்கிடையேயான ஒப்பந்தப்படி, நிறுவனத்தின் சொத்தினை பங்குதாரர் பின்வருவனவற்றுள் எதற்காக மட்டுமே வைத்துப் பயன்படுத்த வேண்டும்?

(A) நிறுவனம் (B) லாபம்

(C) வியாபாரம் (D) கூட்டாண்மை

12. The Court may order to inspect entries in a banker's book. This order may be made

(A) With summoning the bank

(B) Without summoning the bank

(C) With or without summoning the bank

(D) With summoning the bank prescribing the time limit

வங்கியாளர் புத்தக பதிவுகளை ஆய்வு செய்வதற்கான ஆணையினை எவ்வாறு செயல்படுத்தலாம்?

(A) வங்கிக்கு அழைப்பாணை அனுப்பி

(B) வங்கிக்கு அழைப்பாணை அனுப்பாமல்

(C) வங்கிக்கு அழைப்பாணை அனுப்பியோ அல்லது அனுப்பாமலோ

(D) காலக்கெடு நிர்ணயித்து வங்கிக்கு அழைப்பாணை அனுப்பி

13. Any prospectus, notice, circular, advertisement or other documents inviting offers from the public according to the Indian Companies Act 1956 is known as

(A) Prospectus
(B) Share
(C) Memorandum
(D) Publication

இந்திய நிறுமங்கள் சட்டம் 1956ன்படி பொதுமக்கள் பயன்பெறும் பொருட்டு வெளியிடப்படும் ஏதேனும் தகவல் தொகுப்பு, அறிவிப்பு, சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது மற்ற ஆவணங்கள் எவ்வாறு அறியப்படுகிறது?

(A) தகவல் தொகுப்பு
(B) பங்கு
(C) குறிப்பாணை
(D) வெளியீடு

14. Any officer appointed by the State Government to perform all or any of the functions expressly imposed by the Code of Civil Procedure 1908 is called as

(A) Judge
(B) Legal representative
(C) Government Pleader
(D) Public Officer

உரிமையியல் நடைமுறைகள் விதித் தொகுப்பு 1908ல் கூறப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாநில அரசால் நியமனம் செய்யப்படும் அலுவலர் யார்?

(A) நீதிபதி
(B) சட்டப் பிரதிநிதி
(C) அரசு வழக்கறிஞர்
(D) அரசு அலுவலர்

15. According to the Indian Companies Act 1956, "Appointment of Auditors" is dealt in

(A) Section 226
(B) Section 224
(C) Section 225
(D) Section 227

இந்திய நிறுமங்கள் சட்டம் 1956ன் எப்பிரிவு "தணிக்கையாளர்களின் நியமனத்தினை" விவரிக்கிறது?

(A) பிரிவு 226
(B) பிரிவு 224
(C) பிரிவு 225
(D) பிரிவு 227

16. Official Language is described by which of the following articles of the Constitution of India?

(A) 345,346 and 347 (B) 344,345 and 346

(C) 346,347 and 348 (D) 347,348 and 349

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எப்பிரிவுகள் "அலுவல் மொழி" யினை வரையறுக்கின்றன?

(A) 345,346 மற்றும் 347 (B) 344,345 மற்றும் 346

(C) 346,347 மற்றும் 348 (D) 347,348 மற்றும் 349

17. An agency can be terminated by the

(A) Principal (B) Agent

(C) Business of the agency (D) All of the above

ஒரு முகவாண்மை யாரால் நிறுத்தப்படலாம்?

(A) முதல்வர் (B) முகவர்

(C) முகவாண்மையின் வியாபாரம் (D) மேற்கண்ட அனைத்தும்

18. A certified copy of the entry in a banker's book shall in all legal proceedings be received as

(A) Primary evidence of the existence of such entry

(B) Prima-facie evidence of the existence of such entry

(C) Significant evidence of the existence of such entry

(D) Persistent evidence of the existence of such entry

அனைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கைகளிலும் வங்கிப் புத்தகத்திலுள்ள ஒரு சான்றளிக்கப்பட்ட பதிவு எத்தகைய சாட்சியமாக பெறப்படுகிறது?

(A) அப்பதிவு இருப்பதற்கான தலைநிலை சாட்சியம்

(B) அப்பதிவு இருப்பதற்கான முதல் நோக்கிலான சாட்சியம்

(C) அப்பதிவு இருப்பதற்கான தனிச்சிறப்பு வாய்ந்த சாட்சியம்

(D) அப்பதிவு இருப்பதற்கான உறுதியான சாட்சியம்

19. A contract in which some event, collateral to such contract, does or does not happen

(A) Contract (B) Contingent contract

(C) Agreement (D) Agreement or contract

ஒரு ஒப்பந்தத்திற்குத் தொடர்புடைய நிகழ்வு நடைபெற்றாலோ அல்லது நடைபெறாவிட்டாலோ, அந்த ஒப்பந்தம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) ஒப்பந்தம் (B) தற்செயலான ஒப்பந்தம்

(C) இணக்கம் (D) இணக்கம் அல்லது ஒப்பந்தம்

20. Sanctioning of cinematograph films for exhibition is placed under

(A) State list (B) Concurrent list

(C) Union List (D) None of the above

கண்காட்சியில் திரைப்படங்கள் திரையிடுதலுக்கு அனுமதி அளித்தல் எப்பட்டியலில் இடம்பெறுகிறது?

(A) மாநில பட்டியல் (B) ஒருங்கிணைந்த பட்டியல்

(C) மத்திய பட்டியல் (D) இவற்றுள் எதுவுமில்லை

21. "Sign" is defined under which of the following acts?

(A) The Bankers Book Evidence Act 1891

(B) The Constitution of India

(C) The Indian Contract Act 1872

(D) The Tamil nadu General Clauses Act 1891

பின்வருவனவற்றுள் எச்சட்டத்தின் கீழ் "கையொப்பம்" (sign) வரையறை செய்யப்பட்டுள்ளது?

(A) வங்கியாளர் புத்தக சாட்சியகச்சட்டம் 1891

(B) இந்திய அரசியலமைப்புச் சட்டம்

(C) இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872

(D) தமிழ்நாடு பொது உட்கூறுகள் சட்டம் 1891

22. The bailment of goods as security for payment of a debt is called as

(A) agreement (B) delivery

(C) pledge (D) contract

கடன் தொகையினைச் செலுத்துவதற்கான பிணையமாக பொருட்களை ஒப்படைப்பு செய்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) இணக்கம் (B) ஒப்படைத்தல்

(C) அடமானம் (D) ஒப்பந்தம்

23. A company that restricts the rights to transfer the shares is called as

(A) Private Company

(B) Public Company

(C) Public company or Private Company

(D) None of the above

பங்குகளை பரிமாற்றம் செய்யும் உரிமையினைக் கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனம் எவ்வாறு அறியப்படுகிறது?

(A) தனியார் நிறுவனம்

(B) அரசு நிறுவனம்

(C) அரசு நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம்

(D) இவற்றுள் எதுவுமில்லை

24. Every member of the Indian Civil Service is called as

(A) Government Pleader (B) Judge

(C) Public Officer (D) Pleader

இந்திய குடிமைப் பணியின் உறுப்பினர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(A) அரசு வழக்கறிஞர் (B) நீதிபதி

(C) அரசு அலுவலர் (D) வழக்கறிஞர்

25. If 'A' direct 'B' his solicitor, to sell his estate by auction and to employ an auctioneer for this purpose and 'B' names 'C' an auctioneer to conduct the sale, then 'C' is

(A) An agent to 'A' (B) A principal of 'A'

(C) A sub-agent of 'A' (D) None of the above

"A" என்பவர் தனது எஸ்டேட்டினை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவும் ஏலம் விடுபவரை நியமிக்கவும் "B" என்ற தனது சட்ட ஆலோசகருக்கு அறிவுரை வழங்கியதன் பேரில் "B" என்பவர் "C" என்பவரை ஏல விற்பனையை நடத்த நியமித்தால் "C" என்பவர்

(A) "A" என்பவரின் முகவர் (B) "A" என்பவரின் முதல்வர்

(C) "A" என்பவரின் சார் முகவர் (D) இவற்றுள் எதுவுமில்லை

26. Any matter expressed by means of letters, figures or mark intended to be used as evidence of that matter

(A) notification (B) document

(C) judicial proceedings (D) gazette

ஒரு பொருளின் சாட்சியமாகப் பயன்படுத்தப்படக்கூடிய கடிதங்கள், படங்கள் அல்லது குறியீடுகள் மூலமாக வெளிப்படுத்தப்படும் அப்பொருள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) அறிவிக்கை (B) ஆவணம்

(C) நீதிமுறையான நடவடிக்கைகள் (D) அரசிதழ்

27. In the Code of Civil Procedure 1908, Summons to defendants is dealt with which of the following sections?

(A) section 32 (B) section 2

(C) section 27 (D) section 81

உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பு 1908ன் எப்பிரிவு எதிர்வாதிகளுக்கான அழைப்பாணைகள் பற்றி விவரிக்கிறது?

(A) பிரிவு 32 (B) பிரிவு 2

(C) பிரிவு 27 (D) பிரிவு 81

28. According to the General Clause Act 1897, the authority having the power to appoint any person, has the power to

(A) Suspend the appointed person (B) Promote the appointed person

(C) (A) and (B) (D) None of the above

பொது உட்கூறு சட்டம் 1897ன் படி ஒருவரை நியமனம் செய்ய அதிகாரம் உள்ள அதிகாரிக்கு பின்வருவனவற்றுள் எதற்கு அதிகாரம் உள்ளது?

(A) நியமனம் செய்யப்பட்டவரை தற்காலிகப் பணிநீக்கம் செய்வதற்கு

(B) நியமனம் செய்யப்பட்டவருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு

(C) (A) மற்றும் (B)

(D) இவற்றுள் எதுவுமில்லை

29. A case in which a police officer may, in accordance with the First Schedule of the Criminal Procedure Code 1974 arrest without warrant is called as

(A) Cognizable offence (B) Criminal offence

(C) Bailable offence (D) Non bailable offence

குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு 1974ன் முதல் அட்டவணையின்படி பிடியாணையின்றி காவல் அலுவலரால் கைது செய்யப்படும் வழக்கின் அடிப்படை எது?

(A) பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றம்

(B) குற்றவியல் நடைமுறைக்குட்பட்ட குற்றம்

(C) பிணை வழங்கத்தக்க குற்றம்

(D) பிணை வழங்க இயலா குற்றம்

30. "Publication of orders and notifications in the official gazette" is dealt in which section of the Tamilnadu General Clauses Act 1891

(A) Section 21 (B) Section 20

(C) Section 22 (D) Section 23

"ஆணைகள் மற்றும் அறிவிக்கைகளை அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடுதல்" தமிழ்நாடு பொது உட்கூறுகள் சட்டம் 1891-ன் எப்பிரிவில் விளக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 21 (B) பிரிவு 20

(C) பிரிவு 22 (D) பிரிவு 23

31. Taxes on agricultural income is placed under

(A) State list (B) Concurrent list

(C) Union list (D) None of the above

விவசாய வருவாய் மீதான வரி எப்பட்டியலின் கீழ் இடம்பெற்றுள்ளது?

(A) மாநிலப் பட்டியல் (B) ஒருங்கிணைந்த பட்டியல்

(C) மத்திய பட்டியல் (D) இவற்றுள் எதுவுமில்லை

32. Section 29 of the Criminal Procedure Code 1974 deals about

(A) Form of warrant of arrest and duration

(B) Sentences which Magistrates may pass

(C) When police may arrest without warrant

(D) None of the above

குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு 1974ன் பிரிவு 29 எதைப்பற்றியது?

(A) கைது செய்வதற்கான பிடியாணையின் படிவம் மற்றும் காலஅளவு

(B) குற்றவியல் நீதிபதி விதிக்கத்தக்க தண்டனைகள்

(C) காவலர் எப்பொழுது பிடியாணையின்றி கைது செய்யலாம்

(D) இவற்றுள் எதுவுமில்லை

33. The order to inspect the entries in a banker's book shall be served on the bank how many days (exclusive of bank holidays) before the day the same is to be obeyed

(A) 30 (Thirty) days (B) 5 (Five) days

(C) 10 (Ten) days (D) 3 (Three) days

வங்கியாளர் புத்தக பதிவுகளை ஆய்வு செய்வதற்குரிய ஆணை அதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் (வங்கி விடுமுறை நாட்கள் நீங்கலாக) வங்கிக்கு சார்வு செய்யப்பட வேண்டும்?

(A) 30 நாட்கள் (B) 5 நாட்கள்

(C) 10 நாட்கள் (D) 3 நாட்கள்

34. A statement made by any person to a police officer in the course of an investigation, if reduced to writing shall

(A) Be signed (B) Not be signed

(C) Be attested (D) None of the above

விசாரணையின் போது எழுத்துப்பூர்வமாக ஒரு நபரால் வழங்கப்படும் வாக்குமூலம்

(A) கையெழுத்திடப்பட வேண்டும் (B) கையெழுத்திடப்படக்கூடாது

(C) சான்றொப்பம் இடப்பட வேண்டும் (D) இவற்றுள் எதுவுமில்லை

35. "Document of title to goods" includes

(A) Bill of lading (B) Warehouse-keeper's certificate

(C) (A) and (B) (D) None of the above

பொருட்களின் ஆவணத் தலைப்பு எதை / எவற்றை உள்ளடக்கியது?

(A) சரக்கு ஏற்றுவதற்குரிய ஆவணம் (B) கிட்டங்கி காப்பாளரின் சான்றிதழ்

(C) (A) மற்றும் (B) (D) இவற்றுள் எதுவுமில்லை

36. Any person exercising all or any of the powers of a magistrate under the Code of Criminal Procedure 1974 is known as

(A) Magistrate (B) Judge

(C) Government pleader (D) Pleader

குற்றவியல் நடைமுறைகள் விதித்தொகுப்பு 1974ன் படி குற்றவியல் நீதிபதியின் அனைத்து அதிகாரங்களையும் அல்லது ஏதேனும் ஒரு அதிகாரத்தை செயல்படுத்துபவர்

(A) குற்றவியல் நீதிபதி (B) நீதிபதி

(C) அரசு வழக்கறிஞர் (D) வழக்கறிஞர்

37. When distress shall be made?

(A) At the time of sunrise (B) At the time of sunset

(C) After sunrise and before sunset (D) After sunset and before sunrise

ஜப்தி நடவடிக்கை எப்பொழுது மேற்கொள்ளப்பட வேண்டும்?

(A) சூரிய உதயத்தின் பொழுது

(B) சூரிய அஸ்தமனத்தின் பொழுது

(C) சூரிய உதயத்திற்குப் பின் மற்றும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்

(D) சூரிய அஸ்தனத்திற்குப் பின் மற்றும் சூரிய உதயத்திற்கு முன்

38. When a promissory note, bill of exchange or cheque is transferred to any person so as to constitute that person the holder thereof the instrument is said to be?

(A) Matured (B) negotiated

(C) Presented (D) Signed

ஒரு கடன் உறுதி ஆவணம், மாற்று முறி அல்லது காசோலை ஒருவருக்கு மாற்றம் செய்யப்படும் பொழுது அந்த ஆவணம்

(A) முதிர்வடைகிறது (B) கொண்டு செலுத்தப்படுகிறது

(C) வழங்கப்படுகிறது (D) கையெழுத்திடப்படுகிறது

39. In a promissory note (or) Bill of exchange the expression "at sight and on 'Presentation' means

(A) When it is presented for payment

(B) On maturity

(C) On demand

(D) On acceptance

கடன் உறுதி ஆவணம் அல்லது மாற்று முறிவால் உள்ள 'at sight' மற்றும் 'On Presentation' என்ற சொற்றொடர்களுக்கு பொருள் என்ன?

(A) பணம் கொடுப்பதற்கு வழங்கப்படும் பொழுது

(B) முதிர்வடையும் பொழுது

(C) கேட்பின் பொழுது

(D) ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது

40. The relation of partnership arises from

(A) Contract (B) agreement

(C) Treaty (D) relationship

கூட்டாண்மைக்கான உறவு எதிலிருந்து எழுகிறது?

(A) ஒப்பந்தம் (B) இணக்கம்

(C) உடன்படிக்கை (D) உறவுமுறை

41. "A" contracts to pay "B" Rs.10,000/-if "B"s house is burnt. What is the name of this type of contract?

(A) Contingent contract
(B) Contract
(C) Agreement
(D) None of the above

"B" என்பவரின் வீடு எரிந்து போனால் அவருக்கு ரூ.10,000/- கொடுப்பதாக "A" என்பவர் ஒப்பந்தம் செய்கிறார். இது எவ்வகையான ஒப்பந்தம்?

(A) தற்செயலான ஒப்பந்தம்
(B) ஒப்பந்தம்
(C) இணக்கம்
(D) இவற்றுள் எதுவுமில்லை

42. According to the Indian Contract Act 1872, the person delivering the goods upon a contract that they shall be returned when the purpose is accomplished is called as

(A) contract
(B) bailor
(C) agent
(D) principal

இந்திய ஒப்பந்த சட்டம் 1872 ன் படி நோக்கம் நிறைவடைந்தவுடன் பொருட்களை மீள ஒப்படைக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பேரில் பொருட்களை ஒப்படைப்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(A) ஒப்பந்ததாரர்
(B) ஒப்படைப்பவர்
(C) முகவர்
(D) முதல்வர்

43. Local limits for the time being of the ordinary original civil jurisdiction of the High Court of Judicature at Tamil Nadu is known as

(A) District
(B) Presidency Town
(C) State
(D) Town

தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றத்தின் உரிமையியல் அதிகாரத்திற்குட்பட்ட வட்டார எல்லை

(A) மாவட்டம்
(B) மாநில நகரம்
(C) மாநிலம்
(D) நகரம்

44. Section 9 of the Tamil nadu General Clauses Act 1891 is about which of the following?

(A) Recovery of fines

(B) Revival of repealed enactments

(C) Commencement of future acts

(D) Necessary extension of prescribed periods

தமிழ்நாடு பொது உட்கூறுகள் சட்டம் 1891ன் பிரிவு 9 எதைப்பற்றி விளக்குகிறது?

(A) அபராதம் வசூலித்தல்

(B) நீக்கப்பட்ட சட்டத்திற்கு புத்துயிர் அளித்தல்

(C) வருங்கால சட்டங்களின் தொடக்கம்

(D) பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு தேவையான நீட்டிப்பு

45. Section 8 of the Tamilnadu Revenue Recovery Act 1864 deals about

(A) A time of distress

(B) Interest on arrears

(C) Arrear of revenue how recovered

(D) Rules for seizure and sale of movable property

தமிழ்நாடு வருவாய் மீட்புச் சட்டம் 1864 ன் பிரிவு 8 எதைப் பற்றியது?

(A) ஜப்தி செய்வதற்கான நேரம்

(B) வருவாய் நிலுவையின் மீதான வட்டி

(C) வருவாய் நிலுவை மீட்கப்படுதல்

(D) அசையும் சொத்தினை கையகப்படுத்தி விற்பனை செய்வதற்கான விதிமுறைகள்

46. Any proceedings in the course of which evidence is or may be legally taken is termed as

(A) Legal proceedings (B) judgment

(C) Gazette (D) Judicial proceedings

சாட்சியத்தினைச் சட்டப்பூர்வமாக எடுத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவ்வாறு அறியப்படுகிறது?

(A) சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் (B) தீர்ப்பு

(C) அரசிதழ் (D) நீதிமுறை நடவடிக்கைகள்

47. Before the expiration of which day calculating from the day of the distress, a copy of the writing shall be fixed on the premises where the property may have been distrained on the absence of the defaulter?

(A) 5th (Fifth) day
(B) 3rd (Third) day
(C) 2nd (Second) day
(D) 4th (Fourth) day

வருவாய் நிலுவைதாரர் அவருடைய இருப்பிடத்தில் இல்லாத பொழுது, அவர் சொத்தினை ஜப்தி செய்வதற்குரிய எழுத்துப்பூர்வ அறிவிப்பு ஜப்தி செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் அந்த இடத்தில் ஒட்டப்பட வேண்டும்?

(A) 5-வது நாள்
(B) 3-வது நாள்
(C) 2-வது நாள்
(D) 4-வது நாள்

48. Apart from Section 16 of the Tamilnadu Revenue Recovery Act 1864, the defaulter will further be liable to the penalties prescribed under which of the following acts/codes?

(A) The Code of Civil Procedure 1908
(B) The Indian Companies Act 1956
(C) The Criminal Procedure Code 1974
(D) Indian Penal Code Act 1860

வருவாய் நிலுவைக்காக தமிழ்நாடு வருவாய் மீட்புச் சட்டம் 1864ன் பிரிவு 16ன் படி விதிக்கப்படும் தண்டத்தைத் தவிர நிலுவைதாரர் பின்வருவனவற்றுள் எச்சட்டத்தின்படி தண்டம் விதிக்கத் தக்கவர்?

(A) உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு 1908
(B) இந்திய நிறுமங்கள் சட்டம் 1956
(C) குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு 1974
(D) இந்திய தண்டனைச் சட்டம் 1860

49. Promissory note, Bill of Exchange or Cheque payable either to order or to bearer is described in the Negotiable Instruments Act 1881 as

(A) Foreign Instrument
(B) Negotiable Instrument
(C) Inland Instrument
(D) None of the above

செலாவணி முறிச்சட்டம் 1881ன் படி கொணர்பவருக்குக் கொடுபட வேண்டிய கடன் உறுதி ஆவணம், மாற்று முறி அல்லது காசோலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) அயலக ஆவணம்
(B) செலாவணி முறி
(C) உள்நாட்டு ஆவணம்
(D) இவற்றுள் எதுவுமில்லை

50. Under which section of the Tamilnadu Revenue Recovery Act 1864, "Claims to property distrained and sold revenue to be the first chance" is described?

(A) Section 16 (B) Section 17

(C) Section 18 (D) Section 19

வருவாய் நிலுவைக்காக கையகப்படுத்தப்பட்டு விற்கப்படும் சொத்தின்மீது முன்னுரிமை குறித்து விளக்கும் தமிழ்நாடு வருவாய் மீட்புச் சட்டம் 1864ன் சட்டப்பிரிவு

(A) பிரிவு 16 (B) பிரிவு 17

(C) பிரிவு 18 (D) பிரிவு 19

51. "Actionable claim" is defined under which of the following Acts?

(A) The Transfer of Property Act 1882

(B) The Indian Companies Act 1956

(C) The Indian Contract Act 1872

(D) The Indian Evidence Act 1872

"செயல்படுத்தக்கூடிய உரிமை" என்பது பின்வருவனவற்றுள் எச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) சொத்து பரிமாற்றச் சட்டம் 1882

(B) இந்திய நிறுமங்கள் சட்டம் 1956

(C) இந்திய ஒப்பந்தச்சட்டம் 1872

(D) இந்திய சாட்சியச்சட்டம் 1872

52. Which of the following include affirmation and declaration in the case of persons by law allowed to affirm or declare instead of spearing?

(A) Oath (B) Swear

(C) Affidavit (D) All of the above

பின்வருவனவற்றுள் சட்டப்படி உறுதி கூற மற்றும் சாற்றுரைக்க அனுமதிக்கப்பட்டவர்களின் உறுதி கூறுதல் மற்றும் சாற்றுரைத்தலை உள்ளடக்கியது/உள்ளடக்கியவை எது/யாவை?

(A) உறுதிமொழி (B) சூளுரைத்தல்

(C) வாக்குமூலம் (D) இவை அனைத்தும்

53. Under which section of the Transfer of property Act 1882, "Transfer of property" is defined?

(A) Section 3
(B) Section 5
(C) Section 6
(D) Section 7

"சொத்து பரிமாற்றம்" என்பது சொத்து பரிமாற்றச் சட்டம் 1882ன் எப்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 3
(B) பிரிவு 5
(C) பிரிவு 6
(D) பிரிவு 7

54. Termination of an agency is dealt with which section of the Indian Contract Act 1872

(A) Section 204
(B) Section 203
(C) Section 201
(D) Section 205

இந்திய ஒப்பந்தச்சட்டம் 1872ன் எப்பிரிவு முகவாண்மையினை முடிவுக்குக் கொண்டு வருதல் குறித்து விளக்கமளிக்கிறது?

(A) பிரிவு 204
(B) பிரிவு 203
(C) பிரிவு 201
(D) பிரிவு 205

55. Which of the following can be transferred under the Transfer of property Act 1882?

(A) A public office
(B) A mere right to due
(C) An easement
(D) None of the above

சொத்து பரிமாற்றச்சட்டம் 1882ன் படி கீழ்க்கண்டவற்றுள் பரிமாற்றம் செய்யப்படக்கூடியது எது/எவை?

(A) பொது அலுவலகம்
(B) கொடுப்பதற்கான உரிமை
(C) துய்ப்புரிமை
(D) இவற்றுள் எதுவுமில்லை

56. Immovable property shall include which of the following?

(A) Land
(B) Things attached to the earth
(C) Benefits to arise out of land
(D) All of the above

பின்வருவனவற்றுள் அசையாச் சொத்து எது/எவை?

(A) நிலம்
(B) பூமியோடு இணைந்த உடைமைகள்
(C) நிலத்தின் மூலம் எழும் பலன்கள்
(D) மேற்கண்டவை அனைத்தும்

57. Section 23 of the Indian Partnership Act 1932 discusses

(A) Liability of a partner for acts of a firm
(B) partnership not created by status
(C) Effect of admission by a partner
(D) dissolution by the court

இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932ன் பிரிவு 23 விவரிப்பது

(A) நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு பங்குதாரர்களின் கடமை
(B) அந்தஸ்தினால் உருவாக்கப்படாத கூட்டாண்மை
(C) பங்குதாரரால் மேற்கொள்ளப்படும் சேர்க்கையின் விளைவு
(D) நீதிமன்றத்தால் நிகழ்த்தப்படும் கலைப்பு

58. A claim to any debt other than a debt secured by mortgage of movable property or by hypothecation or pledge of movable property is called as

(A) Non actionable claim
(B) actionable claim
(C) Transfer of property
(D) conditional transfer

அசையும் சொத்தின் அடமானத்தின் மீதான பாதுகாக்கப்பட்ட கடனைத் தவிர, இதர கடன் மீதான உரிமை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) செயல்படுத்த இயலாத உரிமை
(B) செயல்படுத்தக்கூடிய உரிமை
(C) சொத்து பரிமாற்றம்
(D) நிபந்தனைக்குட்பட்ட பரிமாற்றம்

59. According to the Indian Penal Code Act 1860, a Municipal Commissioner is a

(A) Public officer
(B) Civil Public officer
(C) Citizen
(D) Public servant

இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் படி நகராட்சி ஆணையாளர் ஒரு

(A) அரசு அலுவலர்
(B) சிவில் பொது அலுவலர்
(C) குடிமகன்
(D) அரசுப் பணியாளர்

60. Goods to be manufactured by the seller after the making of the contract of sale are known as

(A) Specific goods
(B) Future goods
(C) Delivered goods
(D) Transferred goods

விற்பனைக்குரிய ஒப்பந்தத்தைச் செய்த பின் விற்பனையாளர் உற்பத்தி செய்ய வேண்டிய பொருட்கள்

(A) குறிப்பிட்ட பொருட்கள்
(B) வருங்கால பொருட்கள்
(C) ஒப்படைக்கப்பட்ட பொருட்கள்
(D) பரிமாற்றம் செய்யப்பட்ட பொருட்கள்

61. A person who has ceased to pay his debts in the ordinary course of business whether he has committed an act of insolvency or not is called as

(A) seller
(B) defaulter
(C) buyer
(D) insolvent

தன்னுடைய வணிக நடவடிக்கையில் நொடித்துப் போன அல்லது நொடித்துப் போகாத ஒரு நபர் தனது கடனைச் செலுத்தத் தவறினால் அவர் எவ்வாறு அழைக்கப்படுவார்?

(A) விற்பனையாளர்
(B) கடனைச் செலுத்தத் தவறியவர்
(C) வாங்குபவர்
(D) நொடித்துப் போனவர்

62. "Penalty for fraudulent conveyance of property to prevent distress" is dealt in which of the following sections of the Tamilnadu Revenue Recovery Act 1864?

(A) Section 16
(B) Section 17
(C) Section 18
(D) Section 19

ஜப்தி நடவடிக்கையினைத் தடுக்க, சொத்தினை மோசடியாக கொண்டு செல்வதற்கான தண்டம் பற்றி விளக்கும் தமிழ்நாடு வருவாய் மீட்புச் சட்டம் 1864-ன் பிரிவு

(A) பிரிவு 16
(B) பிரிவு 17
(C) பிரிவு 18
(D) பிரிவு 19

63. "Mercantile Agent" is defined under which section of the Sale of Goods Act 1930?

(A) Section 3 (B) Section 4

(C) Section 5 (D) Section 6

பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930ன் எப்பிரிவின் கீழ் "வணிக முகவர்" என்பது வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 3 (B) பிரிவு 4

(C) பிரிவு 5 (D) பிரிவு 6

64. The term 'Public Servant' is defined in which of the following acts/ codes.

(A) The Tamilnadu General clauses Act 1891

(B) The Indian penal code Act 1860

(C) The criminal procedure code 1974

(D) The code of civil procedure 1908

'அரசு பணியாளர்' என்ற சொல் பின்வரும் எந்த சட்டம் அல்லது விதித்தொகுப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) தமிழ்நாடு பொது உட்கூறுகள் சட்டம் 1891

(B) இந்திய தண்டனைச் சட்டம் 1860

(C) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு 1974

(D) உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பு 1908

65. Section 7 of the Transfer of Property Act 1882 describes

(A) Person competent to transfer (B) Conditional transfer

(C) Transfer of property (D) Fulfillment of condition precedent

சொத்து மாற்றச் சட்டம் 1882-ன் பிரிவு 7 பின்வருவனவற்றுள் எதை வரையறுக்கிறது?

(A) பரிமாற்றம் செய்யத் தகுதி வாய்ந்த நபர்

(B) நிபந்தனையுடன் கூடிய பரிமாற்றம்

(C) சொத்து பரிமாற்றம்

(D) முன் நிகழ்வாக நிபந்தனை நிறைவேற்றுதல்

66. Section 47 of the Sale of Goods Act 1930 describes

(A) Unpaid seller
(B) Delivery
(C) Existing of future goods
(D) Seller's lien

பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930-ன் பிரிவு 47 எதைப் பற்றி விளக்குகிறது?

(A) கொடுபடா விற்பனையாளர்
(B) ஒப்படைப்பு
(C) வருங்காலப் பொருட்களின் இருப்பு
(D) விற்பனையாளரின் மீள் உரிமை

67. The person or persons before whom a legal proceeding is hold or taken is called as

(A) a pleader
(B) a court
(C) a judge
(D) a Government pleader

ஒரு சட்டபூர்வ நடவடிக்கை எந்த நபர் அல்லது நபர்கள் முன்னிலையில் வைத்திருக்கப்படுகிறது அல்லது எடுக்கப்படுகிறது?

(A) ஒரு வழக்கறிஞர்
(B) ஒரு நீதிமன்றம்
(C) ஒரு நீதிபதி
(D) ஒரு அரசு வழக்கறிஞர்

68. "Limit of punishment of offence made of several offences" is discussed in

(A) The Tamilnadu General Clauses Act 1891
(B) The Indian Penal Code Act 1860
(C) The Criminal Procedure code 1974
(D) The Code of Civil Procedure 1908

"பல்வேறு குற்றங்களடங்கிய குற்றத்திற்கான தண்டனையின் வரம்பு" எச்சட்டம்/விதித் தொகுப்பின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

(A) தமிழ்நாடு பொது உட்கூறுகள் சட்டம் 1891
(B) இந்திய தண்டனைச் சட்டம் 1860
(C) குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு 1974
(D) உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பு 1908

69. Who of the following may negotiate under the Negotiable Instruments Act 1881?

(A) Sale maker
(B) Drawer
(C) (A) and (B)
(D) None of the above

செலாவணி முறிச்சட்டம் 1881-ன் கீழ் பின்வருபவருள் யார் பேரம் பேசலாம்?

(A) விற்பனை செய்பவர்
(B) பணம் பெறுபவர்
(C) (A) மற்றும் (B)
(D) இவற்றுள் எதுவுமில்லை

70. Except in case of fraud or willful wrong, the sub-agent is responsible for his acts to

(A) principal (B) agent

(C) bailor (D) none of the above

மோசடி அல்லது வேண்டுமென்றே தவறிழைத்தல் ஆகிய நேர்வுகள் தவிர, சார்முகவர் தன்னுடைய செயல்பாடுகள் மூலம் யாருக்குக் கடமைப்பட்டவர்

(A) முதல்வர் (B) முகவர்

(C) ஒப்படைப்பவர் (D) இவற்றுள் எதுவுமில்லை

71. If 'A' being legally bound to appear before the Supreme Court in obedience to a summon issued from that Court, intentionally omits to appear. Under which of the following sections of Indian Penal Code Act 1860, 'A' has committed the offence?

(A) Section 174 (B) Section 160

(C) Section 161 (D) Section 32

உச்சநீதிமன்றத்தின் அழைப்பாணையின்படி சட்டப்படி அந்நீதிமன்றத்தின் முன் ஆஜராக கடமைப்பட்ட 'A' எனும் நபர், வேண்டுமென்றே அவ்வாறு ஆஜராகமலிருத்தல் இந்திய தண்டனைச் சட்டம் 1860-ன் எப்பிரிவின் கீழ் ஒரு குற்றமாகும்?

(A) பிரிவு 174 (B) பிரிவு 160

(C) பிரிவு 161 (D) பிரிவு 32

72. An instrument in writing containing an unconditional undertaking signed by the maker to pay certain sum of money to certain person is called as

(A) Cheque (B) Promissory note

(C) Bill of exchange (D) Negotiable instrument

ஒரு குறிப்பிட்ட பணத்தை குறிப்பிட்ட நபருக்கு செலுத்தும் பொருட்டு நிபந்தனையற்ற உறுதிமொழியுடன் கையெழுத்திடப்படும் எழுத்துப்பூர்வமான ஆவணம்

(A) காசோலை (B) கடன் உறுதி ஆவணம்

(C) மாற்றுமுறி (D) செலாவணி முறி

73. According to Indian Contract Act 1872, if an agent's authority is given by words spoken or written, it is said as

(A) expressed (B) implied

(C) expressed or implied (D) all of the above

இந்திய ஒப்பந்த சட்டம் 1872ன் படி வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ வழங்கப்படும் ஒரு முகவரின் அதிகாரம்

(A) வெளிப்படையானது

(B) குறிப்பானது

(C) வெளிப்படையானது அல்லது குறிப்பானது

(D) மேற்கண்ட அனைத்தும்

74. According to the Sale of Goods Act 1930, the general property in goods and not merely a special property is called as

(A) property
(B) transfer of property
(C) lien
(D) none of the above

பொருட்கள் விற்பனைச் சட்டம் 1930ன் படி பொருட்கள் மீதான குறிப்பிட்ட உடைமை அல்லாத பொதுவான உடைமை எப்பெயரில் அழைக்கப்படுகிறது?

(A) உடைமை
(B) உடைமை பரிமாற்றம்
(C) மீள் உரிமை
(D) இவற்றுள் எதுவுமில்லை

75. Where no provision is made by contract between the partners for the duration of their partnership or for the determination of their partnership, the partnership is

(A) particular partnership
(B) partnership
(C) Partnership not created by status
(D) partnership at will

கூட்டாண்மை ஒப்பந்தத்தில், கூட்டாண்மைக்குரிய கால அளவு மற்றும் கூட்டாண்மையைத் தீர்மானித்தல் ஆகியவற்றிற்கான வழிமுறைகள் வரையறுக்கப்படவில்லையெனில், அக்கூட்டாண்மை எவ்வாறு அறியப்படுகிறது?

(A) குறிப்பிட்ட கூட்டாண்மை
(B) கூட்டாண்மை
(C) அந்தஸ்தினால் உருவாக்கப்படாத கூட்டாண்மை
(D) விருப்பத்தின் பேரிலான கூட்டாண்மை

76. Under which section of the Indian Contract Act 1872, Sub Agent is defined?

(A) Section 191
(B) Section 193
(C) Section 192
(D) Section 194

இந்திய ஒப்பந்தச்சட்டம் 1872ன் எப்பிரிவின் கீழ் "சார் முகவர்" வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 191
(B) பிரிவு 193
(C) பிரிவு 192
(D) பிரிவு 194

77. A warrant may be executed

(A) Within the state in which the warrant issued

(B) At any place of India

(C) Within the district in which the warrant issued

(D) None of the above

ஒரு பிடியாணையினை எங்கு செயல்படுத்தலாம்?

(A) பிடியாணை வெளியிடப்பட்ட மாநிலத்திற்குள்

(B) இந்தியாவின் எப்பகுதியிலும்

(C) பிடியாணை வெளியிடப்பட்ட மாவட்டத்திற்குள்

(D) இவற்றுள் எதுவுமில்லை

78. When a bill of exchange has been received as conditional payment and the condition on which it was received has not been fulfilled, the seller of goods in this circumstance is called as?

(A) Insolvent

(B) Unpaid seller

(C) Defaulter

(D) None of the above

நிபந்தனைக்குட்பட்ட கொடுப்பாக பெறப்பட்ட மாற்றுமுறியின் மீதான நிபந்தனை நிறைவேற்றப்படாத நிலையில், பொருட்களின் விற்பனையாளர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(A) திவாலானவர்

(B) கொடுபடா விற்பனையாளர்

(C) தவறிழைத்தவர்

(D) இவற்றுள் எதுவுமில்லை

79. The statement given by the Judge of on the grounds of a decree or order is

(A) Warrant

(B) Judgment

(C) Interim stay

(D) Legal proceedings

ஒரு தீர்ப்பாணை அல்லது ஆணையின் அடிப்படையில் நீதிபதியால் வழங்கப்படும் அறிக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) பிடியாணை

(B) தீர்ப்பு

(C) இடைக்காலத் தடை

(D) சட்டப்பூர்வமான நடவடிக்கைகள்

80. "Bar of limitation" is described under which section of the Indian Limitation Act 1908?

(A) Section 6

(B) Section 5

(C) Section 3

(D) Section 4

இந்திய வரையறை சட்டம் 1908ன் எந்த பிரிவு "வரையறை மீறல்" என்பதை விளக்குகிறது?

(A) பிரிவு 6

(B) பிரிவு 5

(C) பிரிவு 3

(D) பிரிவு 4

100/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST IN COMMERCIAL TAXES ACTS – PART III

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு வினாக்ககளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Qualifications and disqualifications of auditors
   தணிக்கையாளர்களின் தகுதிகள் மற்றும் தகுதியின்மை

[Turn over

2. Tenure of office of persons serving the Union or State.

மத்திய அரசு அல்லது மாநில அரசுப் பணியாளர்களின் பதவிக்காலம்

3. Sub Agents

சார் முகவர்கள்

4. When Police may arrest without warrant?

எப்போது காவலர் பிடியாணையின்றி கைது செய்யலாம்?

5. Information to cognizable cases

பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய வழக்குகளுக்கான தகவல்

6. Unpaid seller and his right.

கொடுபடா விற்பனையாளர் மற்றும் அவரது உரிமை.